<u>முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்.</u>

**<u>O.S.No.2/2015</u>**

## பி.வா.சா.1– ஜீனா க/பெ. ராமராஜ்

**<u>3ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

பழமலை பெயரில் துறையூர் நீதிமன்றத்தில் ஏற்கனவே வழக்கு நடந்தது என்றால் சரிதான். அந்த வழக்கு சமரசமாக முடிக்கப்பட்டது. அந்த வழக்கு சமரசமாக முடிக்கப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. அந்த வழக்கில் தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டு நிறைவேற்று மனு தாக்கல் செய்து சுவாதீனம் எடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் மூலமாகதான் சொத்து பிரிக்கப்பட்டது. அந்த விவரங்களை நான் வழக்கறிஞரிடம் சொல்லியுள்ளேன். தாவா 1–வது அயிட்டத்தின் சர்வே எண் எனக்கு தெரியாது. தாவா 1–வது அயிட்ட சொத்தில்தான் நான் குடியிருந்து வருகிறேன் என்றால் சரியல்ல. அது தற்போது கடையாக உள்ளது. மொத்தம் 12 கடைகள் உள்ளன. தாவா சொத்தில் ஒரு வீடும் உள்ளது. கடை கட்டடத்திற்கு மேல் தளத்தில் ஹாஸ்டல் இருந்தது. தற்போது இல்லை. காலி நிலங்களும் உள்ளன. தாவா சொத்து கிணற்றுடன் கூடிய வயல் நிலமாகதான் இருந்தது என்றால் சரிதான். என் அப்பா உயிருடன் இருந்தபோது பாகம் எதுவும் பிரிக்கவில்லை. 1992–ல் என் அப்பா எனக்கு சொத்தை தானமாக கொடுத்தார். அதன் பிறகு கடை கட்டினேன். தான செட்டில்மெண்ட் பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். 1992–ல் என் அப்பா தான செட்டில்மெண்ட் எதுவும் எழுதிக்கொடுக்கவில்லை என்று சொன்னால், என் அப்பா தான செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்தது உண்மைதான். அந்த வருடத்தை நான் தவறாக சொல்லியிருக்கலாம். பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.3–ல் என் அப்பா எழுதிக்கொடுத்த தான செட்டில்மெண்ட் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களின்படி என் அப்பா தான செட்டில்மெண்ட் எதுவும் ஏற்படுத்தவில்லை என்றால் சரியல்ல. நான் தான செட்டில்மெண்ட் பத்திரத்தை தாக்கல் செய்யாததால் நான் எந்த அடிப்படையில் கடை கட்டினேன் என்றால் தான செட்டில்மெண்ட்டின் அடிப்படையில்தான் கடை கட்டினேன். என் அப்பா உயிருடன் இருந்தவரை எந்த ஆவணமும் எனக்கு எழுதிக்கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் உள்ள 12 கடைகளில் 7 கடை என் அம்மா பெயரில் இருந்த இடத்தில் என் அப்பா கடை கட்டினார். மீதமுள்ள 5 கடை நான் கட்டினேன். எல்லா கடைகளையும் நகராட்சியின் அனுமதி பெற்றுதான் கட்டினோம். நகராட்சியில் எந்த ஆவணத்தின் அடிப்படையில் அனுமதி பெற்றோம் என்பதற்கான ஆவணம் எதையும் தாக்கல் செய்யவில்லை. கடையை நான் கட்டினேன் என்பதற்கான

ஆவணம் எதையும் தாக்கல் செய்யவில்லை. வாடகை நான்தான் பெற்று வருகிறேன். ஒவ்வொரு கடைக்கும் ரூ. 6,000 மாத வாடகையாக வருகிறது. 12 கடைகளின் வாடகையும் நான்தான் பெற்று வருகிறேன். கடைகளுக்கான முன் பணத்தையும் நான்தான் வாங்கியுள்ளேன். எனது சகோதரர்களுக்கு நான் வாடகை வாங்குவது தெரியும். ஒவ்வொரு கடைக்கும் ரூ. 50,000/– அட்வான்ஸாக வாங்கியுள்ளேன். கடைகளில் நான் எந்தவித வில்லங்கமும் ஏற்படுத்தவில்லை. 12 கடைகள் தவிர வேறு கடைகள் எதுவுமில்லை. 12 கடைகளின் மின் இணைப்பு என் பெயரில்தான் உள்ளது. அதற்கான ஆவணங்கள் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை. மொத்தம் 16 கடைகள் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய தகப்பனார் வடிவேல், சித்தப்பா–சண்முகம், முத்தையா ஆகியோர் எந்த ஆவணமும் எனக்கு ஏற்படுத்திக்கொடுக்கவில்லை என்றும், நான் என்னுடைய பலத்தை பிரயோகித்து ஆவணங்களை என் பெயரில் ஏற்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. எந்த ஆவணங்களும் இல்லாமல் நான் கடை கட்டியது தவறு என்றால் சரியல்ல. நான் எப்போதிலிருந்து கடைகளை கட்டி அனுபவம் செய்து வருகிறேன் என்றால், எனக்கு ஞாபகமில்லை. நான் எப்போது வேலைக்கு சென்றேன் என்றால், 1989–ல் வேலைக்கு சென்றேன். நான் வேலை பார்க்கும் அலுவலகம் உள்ள ஊரில்தான் தங்கியிருந்தேன். தாவா 1 முதல் 4 அயிட்ட சொத்துக்கள் என் அப்பா பெயரில் உள்ள சொத்துக்கள் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையில், தான செட்டில்மெண்ட் பத்திரம் காணாமல் போய்விட்டது என்றும், நாங்கள் எல்லோரும் சேர்ந்து கூட்டு உரிமையாளராக அனுபவம் செய்து வருகிறோம் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நாங்கள் ஒற்றுமையாக இருந்தபோது ஒன்றாக அனுபவித்தோம். சண்டை வந்தபிறகு தனியாக பிரிந்துவிட்டோம். சொத்து பாகம் பிரிப்பதில்தான் பிரச்சனை ஏற்பட்டது. எனது சகோதரர் சந்திரபோஸ் அரசுப்பணியில் இருந்தார் என்றால் சரிதான். வெங்கடேசன், ராமகிருஷ்ணன் ஆகியோரும் வேலைக்கு போனார்கள். வெங்கடேசன், அரசு மருத்துவமனையில் ஓட்டுநராக வேலை பார்க்கிறார். அவர் மீது நான் புகார் கொடுத்ததால் அவருக்கு வேலை போய், சும்மாதான் இருக்கிறார் என்றால் சரியல்ல. எனது கணவர் அரசியலில் உள்ளார். என் கணவர் 2000–ம் வருடத்தில் திருச்சி மாவட்டத்தில் ஊராட்சி மன்ற தலைவராக இருந்தார் என்றால் சரிதான். அவருக்கு உள்ள செல்வாக்கை பயன்படுத்தி தாவா சொத்தின்பேரில் ஐசிஐசிஐ பேங்க்கில் கடன் வாங்கினேன் என்றால் சரியல்ல. நான் வேலையில் இருந்ததால் கடன் கொடுத்தார்கள். என் அம்மா எந்த வருடம், எந்த தேதியில் அடிபட்டார் என்று நான் குறிப்பிட்டு சொல்லவில்லை. என் அம்மாவுக்கு கையெழுத்து போட

தெரியும் என்று நானே அவரை காயப்படுத்தி கையை உடைத்து அவர் கையெழுத்து போடமுடியாதபடி செய்து வற்புறுத்தி அவரிடம் கைரேகை பெற்றேன் என்றால் சரியல்ல. நான் தான செட்டில்மெண்ட் ஆவணத்தையும் தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் பெரம்பலூர் முன்சீப் கோர்ட்டில், வழக்கு போட்டேன். அந்த வழக்கில் என் அப்பா, அம்மா எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட்படி எனக்கு சொத்து பாத்தியம் என்று வழக்கு போட்டேன். 01.06.2010 அன்று ஏற்பட்ட தான செட்டில்மெண்ட்படி 30 ஆண்டுகளாக நான் தனித்து அனுபவித்து வருவதாக சொல்லியுள்ளேன். எனது அப்பா எனது சகோதரிகளுக்கும் சொத்துக்களை தானமாக கொடுத்துள்ளார். அதில் ஒரு சகோதரி – மணிமேகலை என் மீதும், மற்ற சகோதர, சகோதரிகள் மீதும் வழக்கு போட்டுள்ளார் என்றால் சரிதான். என் சகோதரர் – பாலமுருகன் தாக்கல் செய்த பாக வழக்கில், மணிமேகலை அந்த வழக்கின் தீர்ப்புக்கு கட்டுப்படுவதாக குறிப்பாணை தாக்கல் செய்தார் என்றால் சரிதான். நான் 7–ல் ஒரு பாகம் கேட்டு வழக்கு போட்டுள்ளேன். நானும், மணிமேகலையும் ஒரே சொத்துக்குதான் வழக்கு போட்டுள்ளோம். எளம்பலூரில் 6 1/2 ஏக்கர் நிலம் உள்ளது. அதன் சர்வே எண் எனக்கு தெரியவில்லை. அந்த சொத்தில் நான் 2 ஏக்கர் விற்றுள்ளேன். அந்த நிலம் என் பெயரில் இருந்தது. மீதமுள்ள 4 1/2 ஏக்கர் நிலம் என் அப்பா பெயரில் உள்ளது. எனக்கு அம்மா எழுதிக்கொடுத்த ஆவணத்தை நான் தாக்கல் செய்யவில்லை. 01.06.2010 தான செட்டில்மெண்ட் நானாக தயார் செய்தேன் என்றால் சரியல்ல. 2 ஏக்கர் நிலத்தை தமிழ்செல்வன் என்பவருக்கு கிரையம் கொடுத்தேன். அவர் பெரம்பலூர் முன்னால் எம்.எல்.ஏ–வாக இருந்தார். நான் யுவராஜ் என்பவருக்கு கிரையம் கொடுத்தேன் என்றால் எனக்கு பெயர் ஞாபகமில்லை. எம்.எல்.ஏவின் பினாமிக்கு நான் கிரையம் கொடுத்தேன் என்றால் சரியல்ல. எளம்பலூர் நிலத்தில் கிணறு மோட்டார் பம்புசெட் உள்ளது. என் அப்பா சின்னசாமி ரெட்டியாரிடமிருந்து 1948–ல் கிரையம் வாங்கினார் என்றால் எனக்கு அந்த விவரம் தெரியாது. நான் விற்ற சொத்தின் சர்வே எண் எனக்கு ஞாபகமில்லை. ஒரு ஏக்கர் 11 செண்ட்டை மனைகளாக பிரிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் அப்பா உயிருடன் இருந்தபோது மனைகளாக பிரிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

Sd/-A. Balkis, B.L.,
Principal District Judge
Perambalur.